**Signature and Name of Invigilator**

1. (Signature) __________________________
   (Name) ____________________________
2. (Signature) __________________________
   (Name) ____________________________

OMR Sheet No. : ........................................
(To be filled by the Candidate)

Roll No. | | | | | | | | |
(In figures as per admission card)

Roll No.______________________________
(In words)

**D-2609**

**Test Booklet No.**

Time : **1 $^1/_4$** hours]

# PAPER-II
# TAMIL

[Maximum Marks : **100**

Number of Pages in this Booklet : **16**

Number of Questions in this Booklet : **50**

## Instructions for the Candidates

1. Write your roll number in the space provided on the top of this page.
2. This paper consists of fifty multiple-choice type of questions.
3. At the commencement of examination, the question booklet will be given to you. In the first 5 minutes, you are requested to open the booklet and compulsorily examine it as below :
   (i) To have access to the Question Booklet, tear off the paper seal on the edge of this cover page. Do not accept a booklet without sticker-seal and do not accept an open booklet.
   (ii) **Tally the number of pages and number of questions in the booklet with the information printed on the cover page. Faulty booklets due to pages/questions missing or duplicate or not in serial order or any other discrepancy should be got replaced immediately by a correct booklet from the invigilator within the period of 5 minutes. Afterwards, neither the Question Booklet will be replaced nor any extra time will be given.**
   (iii) After this verification is over, the Test Booklet Number should be entered in the OMR Sheet and the OMR Sheet Number should be entered on this Test Booklet.
4. Each item has four alternative responses marked (A), (B), (C) and (D). You have to darken the oval as indicated below on the correct response against each item.
   **Example :** (A) (B) ⬤ (D)
   where (C) is the correct response.
5. Your responses to the items are to be indicated in the **Answer Sheet given inside the Paper I Booklet only.** If you mark at any place other than in the ovals in the Answer Sheet, it will not be evaluated.
6. Read instructions given inside carefully.
7. Rough Work is to be done in the end of this booklet.
8. If you write your name or put any mark on any part of the test booklet, except for the space allotted for the relevant entries, which may disclose your identity, you will render yourself liable to disqualification.
9. You have to return the test question booklet and OMR Answer sheet to the invigilators at the end of the examination compulsorily and must not carry it with you outside the Examination Hall.
10. **Use only Blue/Black Ball point pen.**
11. **Use of any calculator or log table etc., is prohibited.**
12. **Negative Marking :- For each incorrect answer, 0.5 marks shall be deducted.**

## परीक्षार्थियों के लिए निर्देश

1. पहले पृष्ठ के ऊपर नियत स्थान पर अपना रोल नम्बर लिखिए ।
2. इस प्रश्न-पत्र में पचास बहुविकल्पीय प्रश्न हैं ।
3. परीक्षा प्रारम्भ होने पर, प्रश्न-पुस्तिका आपको दे दी जायेगी । पहले पाँच मिनट आपको प्रश्न-पुस्तिका खोलने तथा उसकी निम्नलिखित जाँच के लिए दिये जायेंगे जिसकी जाँच आपको अवश्य करनी है :
   (i) प्रश्न-पुस्तिका खोलने के लिए उसके कवर पेज पर लगी कागज की सील को फाड़ लें । खुली हुई या बिना स्टीकर-सील की पुस्तिका स्वीकार न करें ।
   (ii) **कवर पृष्ठ पर छपे निर्देशानुसार प्रश्न-पुस्तिका के पृष्ठ तथा प्रश्नों की संख्या को अच्छी तरह चैक कर लें कि ये पूरे हैं । दोषपूर्ण पुस्तिका जिनमें पृष्ठ/प्रश्न कम हों या दुबारा आ गये हों या सीरियल में न हों अर्थात किसी भी प्रकार की त्रुटिपूर्ण पुस्तिका स्वीकार न करें तथा उसी समय उसे लौटाकर उसके स्थान पर दूसरी सही प्रश्न-पुस्तिका ले लें । इसके लिए आपको पाँच मिनट दिये जायेंगे । उसके बाद न तो आपकी प्रश्न-पुस्तिका वापस ली जायेगी और न ही आपको अतिरिक्त समय दिया जायेगा ।**
   (iii) इस जाँच के बाद प्रश्न-पुस्तिका की क्रम संख्या OMR पत्रक पर अंकित करें और OMR पत्रक की क्रम संख्या इस प्रश्न-पुस्तिका पर अंकित कर दें ।
4. प्रत्येक प्रश्न के लिए चार उत्तर विकल्प (A), (B), (C) तथा (D) दिये गये हैं । आपको सही उत्तर के दीर्घवृत्त को पेन से भरकर काला करना है जैसा कि नीचे दिखाया गया है ।
   **उदाहरण :** (A) (B) ⬤ (D)
   जबकि (C) सही उत्तर है ।
5. प्रश्नों के उत्तर **केवल प्रश्न पत्र I के अन्दर दिये गये उत्तर-पत्रक पर ही** अंकित करने हैं । यदि आप उत्तर पत्रक पर दिये गये दीर्घवृत्त के अलावा किसी अन्य स्थान पर उत्तर चिह्नांकित करते हैं, तो उसका मूल्यांकन नहीं होगा ।
6. अन्दर दिये गये निर्देशों को ध्यानपूर्वक पढ़ें ।
7. कच्चा काम (Rough Work) इस पुस्तिका के अन्तिम पृष्ठ पर करें ।
8. यदि आप उत्तर-पुस्तिका पर अपना नाम या ऐसा कोई भी निशान जिससे आपकी पहचान हो सके, किसी भी भाग पर दर्शाते या अंकित करते हैं तो परीक्षा के लिये अयोग्य घोषित कर दिये जायेंगे ।
9. आपको परीक्षा समाप्त होने पर प्रश्न-पुस्तिका एवं OMR उत्तर-पत्रक निरीक्षक महोदय को लौटाना आवश्यक है और परीक्षा समाप्ति के बाद उसे अपने साथ परीक्षा भवन से बाहर न लेकर जायें ।
10. **केवल नीले/काले बाल प्वाईंट पैन का ही इस्तेमाल करें ।**
11. **किसी भी प्रकार का संगणक (कैलकुलेटर) या लाग टेबल आदि का प्रयोग वर्जित है ।**
12. **नेगेटिव अंक प्रणाली : प्रत्येक गलत उत्तर के लिए 0.5 अंक काटे जाएँगे ।**

**TAMIL**
**Paper-II**

**Note** : This paper contains **fifty (50)** multiple choice questions, each question carrying **two (2)** marks. Attempt **all** the questions.

குறிப்பு : இந்த வினாத்தாளில் ஐம்பது *(50)* விடைதெரி வினாக்கள் உள்ளன. ஒவ்வொரு வினாவும் இரண்டு *(2)* மதிப்பெண்கள் கொண்டது. அனைத்து வினாக்களுக்கும் விடைதருக.

1. பண்ணத்தியைப் பற்றிப் பேசும் இலக்கண நூல்
   - (A) நன்னூல்
   - (B) வீர சோழியம்
   - (C) தொல்காப்பியம்
   - (D) நம்பியகப் பொருள்

2. இறையனார் களவியலுரைக்கு உரை எழுதியவர்
   - (A) இளம்பூரணர்
   - (B) நக்கீரர்
   - (C) பெரியவாச்சான் பிள்ளை
   - (D) நச்சினார்க்கினியர்

3. மலைபடுகடாம் நூலின் வேறொரு பெயர்
   - (A) விறலியாற்றுப் படை
   - (B) புலவராற்றுப் படை
   - (C) பாணராற்றுப் படை
   - (D) கூத்தராற்றுப் படை

4. கல்வியின் சிறப்பைப் பாடிய மன்னன்
   - (A) சுந்தர பாண்டியன்
   - (B) நெடுஞ்செழியன்
   - (C) அறிவுடை நம்பி
   - (D) மாறவர்மன்

5. "உயிர்தவச் சிறிது; காமமோ பெரிது" எனப் பேசும் அகநூல்
   - (A) குறிஞ்சிப் பாட்டு
   - (B) அகநானூறு
   - (C) நற்றிணை
   - (D) குறுந்தொகை

6. ‘திருத்தொண்டர் புராணம்’ எனும் நூல்

(A) முதல் திருமுறை

(B) பன்னிரண்டாம் திருமுறை

(C) எட்டாம் திருமுறை

(D) பத்தாம் திருமுறை

7. மதுரகவி ஆழ்வாரின் பாசுரங்களில் போற்றப் பெறுபவர்

(A) திருமால் (B) சிவபெருமான்

(C) நம்மாழ்வார் (D) இராமபிரான்

8. ‘குண்டலகேசி’ எனும் நூல்

(A) சமண சமயம் சார்ந்தது

(B) பௌத்த சமயம் சார்ந்தது

(C) சைவ சமயம் சார்ந்தது

(D) வைணவ சமயம் சார்ந்தது

9. ‘சரபேந்திர பூபாலக் குறவஞ்சி’யினைப் பாடியவர்

(A) திரிகூடராசப்பக் கவிராயர்

(B) காளமேகப்புலவர்

(C) கொட்டையூர் சிவக்கொழுந்து தேசிகர்

(D) வேதாந்த தேசிகர்

10. ‘அருள்மாரி’ என்று அழைக்கப் பெறும் ஆழ்வார்

(A) திருமங்கை ஆழ்வார் (B) நம்மாழ்வார்

(C) பெரியாழ்வார் (D) ஆண்டாள்

11. ‘தமிழ் மொழி வரலாறு’ என்னும் நூலின் ஆசிரியர்

(A) மறைமலை அடிகள்

(B) உ.வே.சாமிநாத அய்யர்

(C) நாவலர் சோமசுந்தர பாரதி

(D) பரிதிமாற் கலைஞர்

12. ‘ஆபத்துக் கிடமான அபவாதம்’ எனப் பெரிடப்பட்ட நாவல்
(A) பிரதாப முதலியார் சரித்திரம்
(B) பத்மாவதி சரித்திரம்
(C) கமலாம்பாள் சரித்திரம்
(D) சுந்தரி

13. ஒப்பியல் திறனாய்வைத் தமிழில் தொடங்கி வைத்தவர்
(A) கைலாசபதி
(B) கா.சிவத்தம்பி
(C) வ.வே.சு.அய்யர்
(D) கா.செல்லப்பன்

14. ‘அசலும் நகலும்’ என்னும் திறனாய்வு நூலை எழுதியவர்
(A) வ.சுப.மாணிக்கம்
(B) புதுமைப்பித்தன்
(C) ஆ.முத்துசிவன்
(D) மறைமலை அடிகள்

15. ‘எழுத்து’ என்னும் இலக்கிய இதழை நடத்தியவர்
(A) க.நா.சுப்பிரமணியன்
(B) சுந்தர ராமசாமி
(C) சி.சு.செல்லப்பா
(D) வ.ராமசாமி

16. பத்துப் பாட்டு நூல்கள்
(1) நற்றிணை
(2) மதுரைக் காஞ்சி
(3) நெடுநல்வாடை
(4) கலித்தொகை
இவற்றுள்:
(A) 1ம் 4ம் சரி
(B) 1ம் 3ம் சரி
(C) 2ம் 3ம் சரி
(D) 2ம் 4ம் சரி

17. பரிமேலழகரால் உரை காணப்பெற்ற நூல்கள்
(1) பரிபாடல்
(2) திருக்குறள்
(3) கலித்தொகை
(4) நன்னூல்
இவற்றுள்:
(A) 2ம் 4ம் சரி
(B) 1ம் 2ம் சரி
(C) 2ம் 3ம் சரி
(D) 3ம் 4ம் சரி

18. கம்பர் இயற்றிய நூல்கள்

(1) ஏர் எழுபது (2) கார் நாற்பது

(3) சடகோபர் அந்தாதி (4) வால்மீகி ராமாயணம்

இவற்றுள்:

(A) 1ம் 2ம் சரி (B) 1ம் 2ம் 3ம் சரி

(C) 1ம் 4ம் சரி (D) 3ம் 4ம் சரி

19. ஆண்டாள் அருளிய நூல்கள்

(1) நாச்சியார் திருமொழி (2) திருப்பாவை

(3) திருவாய் மொழி (4) திருவெம்பாவை

இவற்றுள்:

(A) 1ம் 2ம் சரி (B) 2ம் 3ம் சரி

(C) 3ம் 4ம் சரி (D) 2ம் 4ம் சரி

20. மொழி பெயர்ப்பு இலக்கியத்திற்குப் பாடுபட்டவர்கள்

(1) சுத்தானந்த பாரதியார்

(2) சரஸ்வதி ராம்நாத்

(3) த.நா.குமாரசாமி

(4) திரு.வி.க.

இவற்றுள்:

(A) 1ம் 2ம் 3ம் சரி; 4 சரியன்று

(B) 1ம் 2ம் சரி; 3ம் 4ம் சரியன்று

(C) 1ம் 2ம் 4ம் சரி; 3 சரியன்று

(D) 2ம் 3ம் சரி ; 1ம் 4ம் சரியன்று

21. உறுதிக் கூற்று: மெய்ப்பாடு எட்டு என்பார் தொல்காப்பியர்
காரணம்: அவர் வடமொழி மரபினை ஏற்கவில்லை.

(A) உ,கா இரண்டும் சரியில்லை

(B) உ சரி ; கா சரியன்று

(C) உ,கா இரண்டும் சரி

(D) உ சரியன்று ; கா சரி.

22. உறுதிக் கூற்று: சங்ககால இலக்கியத்துள் ஒன்று கலித்தொகை
காரணம்: கலியன் என்பவரால் தொகுக்கப் பெற்றது இந்நூல்

(A) உ,கா இரண்டும் சரி

(B) உ,கா இரண்டும் சரியில்லை

(C) உ சரி ; கா சரியன்று

(D) உ சரியன்று ; கா சரி.

23. உறுதிக் கூற்று: தாண்டக வேந்தர் என்று திருநாவுக்கரசர் போற்றப் பெறுகிறார்.

காரணம்: தாண்டக யாப்பை முதன்முதலில் பயன்படுத்தியவர்

(A) உ சரியன்று; கா சரி

(B) உ, கா இரண்டும் சரி

(C) உ சரி ; கா சரியன்று

(D) உ, கா இரண்டும் சரியல்ல

24. உறுதிக் கூற்று: திருஞான சம்மந்தர் தேவாரத்திற்குத் 'திருக்கடைக் காப்பு' என்று பெயர்

காரணம்: திருக்கடையூரில் பாடப்பெற்றது

(A) உ, கா இரண்டும் சரி

(B) உ சரியன்று ; கா சரி

(C) உ சரி ; கா சரியன்று

(D) உ, கா இரண்டும் சரியில்லை

25. உறுதிக் கூற்று: உரைகள் இலக்கிய வளர்ச்சியின் சமூகத் தேவை
காரணம்: இலக்கிய மீட்சி இயக்கமாக இவை அமைகின்றன.

(A) உ சரி ; கா சரியன்று

(B) உ, கா இரண்டும் சரி

(C) உ சரியன்று ; கா சரி

(D) உ, கா இரண்டும் சரியல்ல

26. உறுதிக் கூற்று: தமிழ் இலக்கியம் உய்வும் உயர்வும் பெறத் திறனாய்வு அவசியம்

காரணம்: இலக்கியம் தன் இருப்பை இழந்து விடுகிறது.

(A) உ, கா இரண்டும் சரி

(B) உ, கா இரண்டும் சரியல்ல

(C) உ சரி ; கா சரியன்று

(D) உ சரியன்று ; கா சரி.

27. உறுதிக் கூற்று: பாரதியார் தம் கவிதை வளத்திற்குச் சக்தி அருளை வேண்டுகிறார்

காரணம்: இந்திய மரபைப் போற்றுதல்

(A) உ சரியன்று ; கா சரி

(B) உ, கா இரண்டும் சரி

(C) உ சரி ; கா சரியன்று

(D) உ சரியன்று ; கா சரியன்று.

28. உறுதிக் கூற்று: திணை இலக்கியம் எனச் சங்க இலக்கியம் போற்றப் படுகிறது

காரணம்: தமிழர் அகவாழ்வைப் பாடுகிறது.

(A) உ, சரி ; கா சரியன்று

(B) உ சரியன்று ; கா சரி

(C) உ,கா இரண்டும் சரி

(D) உ, கா இரண்டும் சரியில்லை

29. உறுதிக்கூற்று: ஷெல்லிதாசன் என்பது பாரதியின் புனைபெயர்.

காரணம்: ஆக்ஸ்ஃபோர்ட் பல்கலைக் கழகத்தில் படித்ததால்.

(A) உ சரி ; கா சரியன்று

(B) உ சரியன்று ; கா சரி

(C) உ, கா இரண்டும் சரியல்ல

(D) உ, கா இரண்டும் சரி.

30. நிரல் படுத்துக: தொல்காப்பியர் கூறும் வரிசை

(A) கூத்தர், பாணர், பொருநர், விறலியர்

(B) பாணர், பொருநர், விறலியர், கூத்தர்

(C) கூத்தர், பொருநர், விறலியர், பாணர்

(D) கூத்தர், விறலியர், பாணர், பொருநர்

31. நிரல் படுத்துக: வள்ளுவரின் வாய்ச்சொல் வரிசை

(A) அழுக்காறு, வெகுளி, அவா, இன்னாச் சொல்

(B) அழுக்காறு, இன்னாச் சொல், அவா, வெகுளி

(C) இன்னாச் சொல், அவா, வெகுளி, அழுக்காறு

(D) அழுக்காறு, அவா, வெகுளி, இன்னாச்சொல்

32. நிரல் படுத்துக: தேவார ஆசிரியர்கள் மூவர்

(A) சம்மந்தர், சுந்தரர், அப்பர்

(B) திருநாவுக்கரசர், சுந்தரர், சம்மந்தர்

(C) திருஞானசம்மந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர்

(D) சுந்தரர், அப்பர், சம்மந்தர்

33. நிரல் படுத்துக: பரிபாடல் வரிசை படுத்தும் முறை

(A) அருள், அன்பு, அறன்

(B) அறன், அருள், அன்பு

(C) அன்பு, அருள், அறன்

(D) அருள், அறன், அன்பு

34. நிரல் படுத்துக: தொல்காப்பியரின் நிலத் தெய்வ வரிசை

(A) மாயோன், சேயோன், வேந்தன், வருணன்

(B) வேந்தன், சேயோன், மாயோன், வருணன்

(C) சேயோன், வருணன், வேந்தன், மாயோன்

(D) வருணன், வேந்தன், மாயோன், சேயோன்

35. நிரல் படுத்துக: முதலாழ்வார் மூவர்

(A) பேயாழ்வார், பொய்கை ஆழ்வார், பூதத்தாழ்வார்

(B) பொய்கை ஆழ்வார், பூதத்தாழ்வார், பேயாழ்வார்

(C) பூதத்தாழ்வார், பொய்கை ஆழ்வார், பேயாழ்வார்

(D) பொய்கை ஆழ்வார், பேயாழ்வார், பூதத்தாழ்வார்

36. நிரல் படுத்துக: முதல் எட்டுத் திருமுறைகளை முறையே பாடினோர்

(A) மாணிக்கவாசகர், சுந்தரர், அப்பர்,சம்மந்தர்

(B) அப்பர்,சுந்தரர், மாணிக்கவாசகர், சம்மந்தர்

(C) சம்மந்தர், அப்பர், சுந்தரர், மாணிக்கவாசகர்

(D) சுந்தரர், மாணிக்கவாசகர், சம்மந்தர், அப்பர்

37. நிரல் படுத்துக: கவிஞர்கள் தோற்ற வரிசை

(A) பாரதிதாசன், பாரதியார், கண்ணதாசன், சுரதா

(B) பாரதியார், பாரதிதாசன், சுரதா, கண்ணதாசன்

(C) பாரதியார், சுரதா, பாரதிதாசன், கண்ணதாசன்

(D) பாரதியார், கண்ணதாசன், பாரதிதாசன்,சுரதா

38. நிரல் படுத்துக: இதழ்கள் தோற்ற வரிசை

(A) சுதேசமித்தரன், மணிக்கொடி, சுதந்திரச் சங்கு,எழுத்து

(B) சுதேசமித்தரன், சுதந்திரச் சங்கு, மணிக்கொடி, எழுத்து

(C) மணிக்கொடி, சுதேசமித்தரன், எழுத்து,சுதந்திரச் சங்கு

(D) எழுத்து, மணிக்கொடி, சுதந்திரச் சங்கு, சுதேசமித்தரன்

**39.** பொருத்துக.

| | | | |
|---|---|---|---|
| (a) | வெறியாட்டு | (1) | முல்லை |
| (b) | பரத்தமை | (2) | குறிஞ்சி |
| (c) | ஏறுதழுவுதல் | (3) | பாலை |
| (d) | உடன் போக்கு | (4) | மருதம் |

| | a | b | c | d |
|---|---|---|---|---|
| (A) | 4 | 3 | 1 | 2 |
| (B) | 3 | 1 | 2 | 4 |
| (C) | 2 | 4 | 1 | 3 |
| (D) | 2 | 3 | 4 | 1 |

**40.** பொருத்துக.

| | | | |
|---|---|---|---|
| (a) | கோப்பெருஞ்சோழன் | (1) | மானவுணர்ச்சி |
| (b) | இரும்பொறை | (2) | கல்வியின் மேன்மை |
| (c) | பாரி வள்ளல் | (3) | உண்ணா நோன்பு |
| (d) | நெடுஞ்செழியன் | (4) | கபிலர் நட்பு |

| | a | b | c | d |
|---|---|---|---|---|
| (A) | 2 | 4 | 1 | 3 |
| (B) | 4 | 1 | 2 | 3 |
| (C) | 3 | 1 | 4 | 2 |
| (D) | 2 | 3 | 4 | 1 |

**41.** பொருத்துக.

| | | | |
|---|---|---|---|
| (a) | மீனாட்சியம்மைப் பிள்ளைத்தமிழ் | (1) | மீனாட்சிசுந்தரம் பிள்ளை |
| (b) | திருச்செந்தூர் முருகன் பிள்ளைத்தமிழ் | (2) | புலமைப் பித்தன் |
| (c) | சேக்கிழார் பிள்ளைத்தமிழ் | (3) | பகழிக் கூத்தர் |
| (d) | பாவேந்தர் பிள்ளைத்தமிழ் | (4) | குமரகுருபரர் |

| | a | b | c | d |
|---|---|---|---|---|
| (A) | 4 | 3 | 2 | 1 |
| (B) | 3 | 1 | 4 | 2 |
| (C) | 4 | 3 | 1 | 2 |
| (D) | 2 | 1 | 4 | 3 |

**42.** பொருத்துக.

| | | | |
|---|---|---|---|
| (a) | திருக்கடைக் காப்பு | (1) | சுந்தரர் |
| (b) | திருத்தாண்டகம் | (2) | சம்மந்தர் |
| (c) | தேவாரம் | (3) | மாணிக்கவாசகர் |
| (d) | திருவாசகம் | (4) | திருநாவுக்கரசர் |

| | a | b | c | d |
|---|---|---|---|---|
| (A) | 3 | 4 | 1 | 2 |
| (B) | 2 | 4 | 1 | 3 |
| (C) | 3 | 2 | 1 | 4 |
| (D) | 4 | 3 | 1 | 2 |

**43.** பொருத்துக.

| | | | |
|---|---|---|---|
| (a) | திருக்குற்றாலக்குறவஞ்சி | (1) | தஞ்சைவேதநாயகம் சாஸ்திரியார் |
| (b) | சரபேந்திர பூபாலக் குறவஞ்சி | (2) | சிற்றம்பலக் கவிராயர் |
| (c) | பெத்லகேம் குறவஞ்சி | (3) | கொட்டையூர் சிவக்கொழுந்து தேசிகர் |
| (d) | வெங்களப்ப நாயக்கர் குறவஞ்சி | (4) | திரிகூட ராசப்பக்கவிராயர் |

| | a | b | c | d |
|---|---|---|---|---|
| (A) | 2 | 4 | 3 | 1 |
| (B) | 4 | 3 | 1 | 2 |
| (C) | 3 | 4 | 2 | 1 |
| (D) | 1 | 3 | 2 | 4 |

**44.** பொருத்துக.

| | | | |
|---|---|---|---|
| (a) | மண்குடிசை | (1) | தி.ஜானகிராமன் |
| (b) | ஒருபுளியமரத்தின் கதை | (2) | சிவகாமி |
| (c) | ஆனந்தாயி | (3) | சுந்தர ராமசாமி |
| (d) | அம்மா வந்தாள் | (4) | மு.வரதராசன் |

| | a | b | c | d |
|---|---|---|---|---|
| (A) | 4 | 3 | 1 | 2 |
| (B) | 4 | 3 | 2 | 1 |
| (C) | 4 | 1 | 3 | 2 |
| (D) | 3 | 2 | 1 | 4 |

**45.** பொருத்துக.

| | | | |
|---|---|---|---|
| (a) | சிற்பி | (1) | பால் வீதி |
| (b) | அப்துல் ரகுமான் | (2) | இன்னொரு தேசியகீதம் |
| (c) | நா.காமராசன் | (3) | சூரிய நிழல் |
| (d) | வைரமுத்து | (4) | கறுப்பு மலர்கள் |

| | a | b | c | d |
|---|---|---|---|---|
| (A) | 3 | 1 | 4 | 2 |
| (B) | 1 | 3 | 4 | 2 |
| (C) | 3 | 4 | 2 | 1 |
| (D) | 4 | 2 | 3 | 1 |

கீழ் வரும் கட்டுரைப் பகுதியைப் படித்துப் பார்த்துத் தொடர்ந்து இடம்பெறும் வினாக்களுக்கு உரிய விடைகளைத் தருக.

வையத்தில் வாழும் இனங்களில் பார் முழுவதும் பரவி வாழ்பவை ஐந்து. அவற்றுள் அடங்குவோர்: யூதர், ஆங்கிலேயர், சீனர், ஜப்பானியர், இந்தியர். பொதுவாக இந்தியர் எனக் கூறப்பட்டாலும் உலகு தழுவி வாழும் இந்தியர்களில் தலையாயவர் தமிழர். இன்று இந்திய மொழிகளில் தமிழ் மட்டுமே இரண்டு நாடுகளில் தேசிய அளவில் ஆட்சி மொழி;

இந்தியத் துணைக் கண்டத்தில் மாநில அளவில் ஆட்சி மொழி. மலேசியா, மொரிசியஸ் முதலான நாடுகளில் அங்கீகாரம் பெற்ற மொழி. தமிழர்கள் தங்கள் மொத்தத் தொகையில் ஏறத்தாழ 15 சதவிகிதத்தினர் தமிழகம் தாண்டி, நாற்பதுக்கும் மேற்பட்ட அயலகங்களைத் தாயகங்களாகக் கொண்டு வாழ்கின்றனர். தமிழர்கள் இன்று ஒரு மொழியினர்; பல நாட்டினர். அவர்கள் பேசும் மொழி, மக்கள் தொகை அளவில் உலகில் பேசப்படும் ஆறாயிரத்துக்கும் மிஞ்சிய மொழிகளில் 17-வது இடத்தை வகிக்கிறது.

இருப்பினும் தமிழர்கள் - இந்தியா உள்பட - எல்லா நாட்டிலும் சிறுபான்மையர். தொழில் நுட்பம் கண்ட சாதனையில் தூரம் மறைந்து விட்டது. இயற்கைத் தடைகள் வலுவிழந்து விட்டன. அரசியல் எல்லைகளும் பையப் பைய ஆளுமை குன்றி வருகின்றன. இவற்றின் விளைவைத் தான் பரந்து விரிந்திருந்த உலகு 'குவலயக் கிராம்' **(Global Village)** ஆக மாறி வருகிறது எனச் சுருக்கமாகக் கூறலாம்.

திராவிட மொழிகள் இருபத்து மூன்றையும் வழங்குமிடம், நிலவும் மொழியியற் கூறுகளின் பொதுத்தன்மை ஆகியவற்றின் அடிப்படையில் மூன்று கூறுகளாகப் பகுப்பர் மொழியியல் ஆய்வாளர்கள். தமிழ், மலையாளம், கன்னடம், துளு, குடகு, கோத்தா, தோடா, படகா ஆகிய எட்டு மொழிகளும் தென் திராவிட மொழிகளாகும். தெலுங்கு, கோண்டி, கோயா, கூயி, கூவி, கோலமி, பர்ஜி, கதபா, கொண்டா, நாயக்கி, பெங்கோ, மண்டா ஆகிய 12 மொழிகளும் நடுத் திராவிட மொழிகளாகும். குருக், மால்டோ, பிராகுவி ஆகிய 3 மொழிகளும் வட திராவிட மொழிகளாகும். இவற்றுள் தமிழ் மொழி தமிழ் நாட்டிலும், மலையாளம் கேரள மாநிலத்திலும், கன்னடம் கர்நாடக மாநிலத்திலும், தெலுங்கு ஆந்திரப் பிரதேசத்திலும் ஆட்சி மொழிகளாக உள்ளன. பிராகுவி கிழக்குப் பாகிஸ்தானிலுள்ள பலுசிஸ்தானத்தில் வழங்கும் ஒரு மொழி ஆகும். மால்டோ மொழி வங்காளத்திலும்,

குருக், கோண்டி முதலான மொழிகள் மத்திய இந்தியாவிலும் பேசப்படுவதைக் கொண்டு திராவிட மொழிகளின் பரப்பினையும் பழமையினையும் அறியலாம்.

திராவிட மொழிகள் மிகப் பழமையான மொழிகள் என்பதும், 3000 ஆண்டுகளுக்கு முன்னரே இந்திய நாட்டில் வழக்கிலிருந்து வந்துள்ளன என்பதும் இன்றைய மொழியியலாளர் கொள்கை. இந்தோ ஆரிய மொழிப் பிரிவின் தாய் மொழியாகக் கருதப்பெறும் சமஸ்கிருதம் இந்திய நாட்டில் நுழைவதற்கு முன்னரே திராவிட மொழிகள் வழக்கில் இருந்தன. மொகஞ்சதோரா - ஹரப்பா என்னும் சிந்து நதி நகரங்களில் அகழ்வாராய்ச்சி வாயிலாகக் கண்டெடுக்கப்பட்ட கல்வெட்டுகள் திராவிட மொழியைச் சார்ந்தன என்று ஹீராஸ் பாதிரியார் குறிப்பிடுகின்றார். திராவிட மொழிகள் வட மொழியாகிய சமஸ்கிருதத்திலிருந்து உருவானவை அல்ல என்றும், இவை இலக்கணச் சிறப்பாலும் ஏனைய பண்பாலும் வட மொழியிலிருந்து வேறுபட்டவை என்றும், இவை ஒரு குடும்பமாகக் கருதத்தக்கவை என்றும் இராபர்ட் கால்டுவெல் என்னும் மேல் நாட்டு அறிஞர் (1856) ‘திரவிட மொழிகளின் ஒப்பிலக்கணம்’ என்னும் நூலின் வாயிலாக நிலைநாட்டினார். அவர் காலத்தில் 12 திராவிட மொழிகள் தாம் இருந்தன. இவற்றுள் தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம் ஆகியவற்றை இலக்கிய மொழிகளாகவும் திருந்திய மொழிகளாகவும் கால்டுவெல் கருதினார். ஏனெனில் திராவிட மொழிகளில் இந்த நான்கு மொழிகளில் தாம் இலக்கியங்கள் உள்ளன.

**46.** நிரல் படுத்துக: உலகில் பரவி வாழும் இனங்கள்

(A) யூதர், ஆங்கிலேயர்,சீனர்,இத்தாலியர்,இந்தியர்

(B) ஆங்கிலேயர்,யூதர்,சீனர்,இத்தாலியர்,ஜப்பானியர்

(C) யூதர்,ஆங்கிலேயர்,சீனர்,ஜப்பானியர்,இந்தியர்

(D) யூதர்,மங்கோலியர்,சீனர்,ஜப்பானியர்,இந்தியர்

47. உறுதிக் கூற்று: தமிழர்கள் ஒரு மொழியினர்; பல நாட்டினர்.
காரணம்: பலநாடுகளில் ஆட்சி செய்வதால்

(A) உ சரி ; கா சரி

(B) உ சரியன்று ; கா சரி

(C) உ,கா இரண்டும் சரியல்ல

(D) உ சரி ; கா சரியன்று

48. நிரல் படுத்துக: திராவிட மொழிகளில் இலக்கிய வளம் கொண்ட மொழிகள்

(A) தமிழ், தெலுங்கு,கொண்டா,கன்னடம்

(B) தமிழ், மலையாளம்,கன்னடம், குடகு

(C) தமிழ், தெலுங்கு, கன்னடம்,மலையாளம்

(D) தமிழ், தெலுங்கு,மலையாளம், துளு

49. பொருத்துக.

| | | | |
|---|---|---|---|
| (a) | தென் திராவிட மொழி | (1) | தெலுங்கு |
| (b) | நடுத்திராவிட மொழி | (2) | மால்டோ |
| (c) | வடதிராவிட மொழி | (3) | சமஸ்கிருதம் |
| (d) | இந்தோ-ஆரிய மொழி | (4) | தமிழ் |

| | a | b | c | d |
|---|---|---|---|---|
| (A) | 2 | 1 | 3 | 4 |
| (B) | 4 | 2 | 1 | 3 |
| (C) | 4 | 1 | 2 | 3 |
| (D) | 3 | 4 | 1 | 2 |

50. பலுசிஸ்தானத்தில் வழங்கும் திராவிட மொழி

(A) கோத்தா (B) தோடா

(C) கோலமி (D) பிராகுவி

Space For Rough Work